Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது — தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூஎ]  யாழ்ப்பாணம்:- மன்மத ௵ மார்கழி மீ அஉ வெள்ளிக்கிழமை (23 DEC. 1955) [இல-ந.அ]

# புலவரோடு பனிப்புயல் பேசுங் காட்சி

## யாக்கை நிலையாமையை நினைவூட்டும் சிறப்பு

## தேனருவியிற் படிந்து விளையாடும் குழவியாம் தென்றல்

(முற்றொடர் — 5)

### பருவகாலங்களும் பேசுமோ… ….!

பருவ காலங்கள் நான்கும் மாறி மாறிச் சகடக் கால்போன்று வருகின்றன. நாம் உள்ளங்களுக்கின்பமூட்டுவதைத் தென்றல் என்றழைக்கிறோம். அப்படிப்பட்டதொரு காற்றை மேலைக் காற்று என்றழைக்கின்றனர் மேனாட்டவர். வசந்த காலத்தில் வீசுங் காற்றுத்தான் மேலைக் காற்றாகும். கோடையில் சுழற்காற்று; இலையுதிரில் சூறாவளி, பனிப்புயல் இவைகளுக்கெல்லாம் குரல் உண்டா....? அவைகளும் பேசுமோ ........?

ஆம்! இதோ அவைகள் பேசுகின்றன. யாருடன் பேசுகின்றன? "அகஸ்டாவேர்" (Augasta Ware) என்ற ஆங்கிலக கவிஞருடன்தான் அதை அவரே கூறுகிறார் கேளுங்கள்!

வசந்த காலத்தில் மென்மையான இளம் உரோசா மலர்கள்மீது தவழ்ந்து வருகிற அந்த மேலைக் காற்று என்ன சொல்கிறது? குழப்பம் நிறைந்த வாழ்க்கைப் பாதையினுள் அலைவதற்கு முன் ஒரு பரிசுத்தமான இப்பூவுலகப் பகட்டையும் பற்றி நமக்கு வலியுறுத்துகிறதாம்.

### பனிப்புயல் என்ன சொல்கிறது....?

வரும் வழியெல்லாம் பிணக்குவியலைச் சேர்த்துக்கொண்டே வரும் அது வாழ்க்கையென்பது நிலையற்றது சாவு என்பது உறுதி. மறந்துவிடாதே! என்று பறைசாற்றுகிறதாம்! அதன் குரல் எங்கும் எதிரொலிக்கிறதாம்!

**மதுரை திரு. பட்டாபி நாராயணன் B. Sc**

இளைஞன் கொண்டுள்ள இன்ப உணர்ச்சியைப் பற்றிச் சொல்லுகிறதாம்

கோடைச் சுழற்காற்று எதை அறிவுறுத்துகிறதாம்? 'வாழ்க்கைப் போரில் சிதைந்து அழிந்துவிடாமல் என்றென்றும் நிலைத்திருக்கவேண்டிய நம்பிக்கை — உள்ளப, வாழ்நாட்களிலேயே என்றும் மறக்கமுடியாத அந்த ஒருசில தனிச் சிறப்புப் பெற்ற காலங்கள் — சிலமணி நேரங்கள்' இவற்றைப்பற்றி நினைவுறுத்துகிறதாம்.

### இலையுதிரின் சூறாவளி யாது கூறுகிறது....?

இலைகளைக்கொய்து அலங்கோலமாகப் பறக்கவிட்டுக்கொண்டும், இயற்கையின் அழகை அழித்துக்கொண்டும் விரைந்து வரும் அது வாழ்க்கையும் அதன் — நிச்சயமான தொரு அழிவையும் நம்மை விட்டுக் கணப்பொழுதில் மறையும் புயலுக்குப்பின் அமைதி அவ்வமைதியான சூழ்நிலையில் வீசுகிறது ஒரு மெல்லிய காற்று. அது இறந்த உடல்களினின்று பிரிந்த ஆவிக்கு ஆறுதலளிக்கிறதாம். மரணத்திற்குப் பின் ஏற்படும் அமைதி — இன்பம். இவற்றையெல்லாம் அது நினைவுறுத்துகிறதாம். இக் கவிதையில்தான் எவ்வளவு உலகியல் உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன! இதுதான் கவித்திறனின் மேன்மை என்பது.

பருவகாலங்களிலேயே நம் உள்ளங்களுக்கு உவகை ஊட்டுவது வசந்தகாலம். வசந்த காலத்தில் நாம் கொள்ளும் இன்ப நுகர்ச்சிக்குக் காரணமாயிருப்பது தவழ்ந்து வருந் தென்றலேயாகும். தென்றலின் பிறப்பிடமே திருக்குற்றாலமல்லவா! அத்தலத்திலேயே பிறந்து வளர்ந்து, பெருமையடைந்து பின் முத்திபெற்ற திரி கூடராசப்பக் கவிராயர் தாம் இயற்றிய திருக்குற்றாலத்தல புராணத்தில் தென்றலைப்பற்றி வருணிக்கிறார். அக்கவிதையைப் படிக்குந்தோறும் நம் உடலும் உள்ளமும் தென்றலால் பெறும் இன்பத்தை உணர்கின்றன. தென்றல் அவரது கவி நோக்குக்கு ஒரு அருமையான அழ

தொடர்ச்சி 6-ம் பக்கம்

### வழக்கறிஞர்களின் வருடாந்த மகாநாடு

சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் வழக்கறிஞர்களின் இரண்டாவதுமகாநாடுநடந்தது. நீதித்துறை அமைச்சர் ஸ்ரீ ஈ. பி. விக்கிரமநாயக இதை ஆரம்பித்து வைத்தார். அவர் அத்தருணம் பேசும்போது நாட்டு வாழ்க்கை முறையைத் திருத்தி அமைக்கும் துறையில் வழக்கறிஞர்கள் ஈடுபடவேண்டுமென்று குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண நகர சபைத் தலைவர் ஸ்ரீ எம். சுல்தான் அவர்கள் பேசும்போது மொழிவாதத்தால் உண்டாகும் வேசத்தைத் தடுக்க உதவுமாறு தலைவர் சேர். சிற்றில் டி. சொய்சா அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

### புகையிரதத்துக்கு இரட்டைப் பாதை

யாழ்ப்பாணப் பகுதிப் புகையிரதத்துக்கு இரட்டைப்பாதை அமைத்தற்கு வேண்டிய நடவடிக்கை உடனே எடுக்க வேண்டுமென்று போக்கு வரத்து மந்திரியைக் கேட்கும் பிரேரணை ஒன்று யாழ்ப்பாணம் நகரசபையில் முதலியார் சி. முத்துத்தம்பி அவர்களால் பிரேரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

### இலங்கை — இந்திய உடன்படிக்கை

இலங்கை இந்திய உடன்படிக்கை கையாளப்பட முடியாதென்பதால் அது நீக்கப்பட்டதாகக் கொள்ளுமாறு இந்திய முதல் மந்திரிக்கு எழுத இலங்கை அதிகாரிகள் தீர்மானித்துள்ளனராம்.

# என்ன வேண்டும்.........?

## நாம் செய்யவேண்டியது எது?

கடவுள் திடீரென உங்கள்முன் தோன்றி 'என்ன வேண்டும்?' என்று கேட்டால் நீங்கள் எதைக் கேட்பீர்கள்?

"எனது வறுமைப் பிணியைப் போக்கி, நல்ல செல்வத்துடன் நாலுபேர் மதிக்க வாழும்படி அருள வேண்டும்"

"இந்தத் தீராத நோயிலிருந்து, இறைவா! என்னை மீட்டுவிடு."

"எனக்கு நல்ல உத்தியோகம் கிடைக்க அருள்வாய் ஆண்டவனே!"

"அழகான நற்குணமுள்ள ஒரு இளம்பெண்ணை மணந்து மகிழ்ச்சியுடன் வாழவேண்டும்"

இப்படி, பலவிதமான பதில்கள் கடவுளுக்குக் கிடைக்கும். சிற்றறிவு படைத்த எம்மால், சிற்றின்பத்தையே பேரின்பமென்று கருதும் எம்மால், நிலலாதவற்றை நிலையினவென்றுணரும் புல்லறிவு படைத்த எம்மால் வேறு எதைத்தான் கேட்க முடியும்?

கடவுளும் அப்படியே அருள்செய்கின்றார் என்று வைத்துக் கொள்வோம். நாம் மனத் திருப்தியுடன், கடவுளின் கருணையை வியந்துகொண்டு செல்கின்றோம். நாம் நினைத்ததை, விரும்பிக் கேட்டதை கடவுளே கொடுத்துவிட்டார்! மனதில் மட்டற்ற மகிழ்ச்சி பொங்குகின்றது. ஆனால் இந்த மகிழ்ச்சி சில நாட்களில் மாறிமறைந்துவிடுகின்றது. புதிய ஆவல், புதிய ஏக்கம், பிறக்கின்றது. மனம் சலிப்படைகின்றது. கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு ஒருபொருளை அடையும்வரைக்கும் நமக்கிருக்கும் மகிழ்ச்சி, அந்தப் பொருளை அடைந்தபின்பு இருப்பதில்லை. சீ! இவ்வளவுதானா! நான் ஏதோ பெரிதாக எண்ணியிருந்தேனே! இதற்குத் தானா இவ்வளவு பாடுபட்டேன்!" என்றெல்லாம் எண்ணுகின்றோம். மறுபடியும் புதுப்புது ஆசைகள்; புதுப்புது விருப்புகள்; கடவுளை வேண்டுதல்; இப்படியே செல்கின்றது உலகு. மனித இயற்கை இது; மாற்றுவது கஷ்டம்தான்.

**ஆசிரியர் சி. சரவணபவன் B.A.**

தொடர்ச்சி 5ம் பக்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச் ...

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். மன்மத ஹூ மார்கழி ௴
௮உ வெள்ளிக்கிழமை

## மக்கள் தீர்ப்பா?

இலங்கை முசல்மான்களின் இருதாபனங்கள் இரகசியமாக நடத்தியஒருகூட்டு மாநாட்டிலேசிங்களமே அரசமொழியா ல் வேண்டுமென்று முடிவுசெய்தன ரென்றசெய்தி தமிழ்பேசும் மக்களனைவரையும் திடுக்கிட வைத்துவிட்ட து மன் ற ஏனையோரையும் ஆச்சரியப்படச் செய்துவிட்டது. மக்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத் தி முறைப்படி தெரிவு செய்த முசுலீம் பாராளுமன்ற அங்கத்தவர்கள் இருவரே இந்தக் கூட்டுமாநாட்டிலே கலந்துகொண்டார்கள் என்பதும் ஏனைய அங்கத்தவர்கள் அதிற் பங்குபற்றுதுவிட்டனரென்பதும் இந்தமுடிவை விலையில்லாத தொன்றாகச் செய்துவிட்டன. எனவே இதனுல் யாரும் கலக்கம் அடைவதற்கு அவசியமில்லை. மூதூர் அங்கத்தவர் ஜனுப் முகம்மது அலி அவர்கள் திட்டவட்டமாகத் தமது கொள்கையை எடுத்துரைத்ததுமன்றி இந்தக் கூட்டு மாநாட்டின் கூற்றுப் பொருந்தாததென்றும் மக்களின் தீர்ப்பாகமாட்டா தென்றும் தெளிவாக விளக்கியிருக்கின்றார். வடக்கும் கிழக்கும் வாழ்ந்துவரும் முசுலிம்கள் வாழையடி வாழையாகப் பல்லாண்டுகளாகத் தமிழையே தாய்மொழியாகப் போற்றி வந்ததுமன்றி அந்தப் பண்பாட்டிலேயே வேரூன்றிவிட்டார்கள் என்பதைக் கொழும்புமா நகரத்து அங்கத்தவர்கள் அறியாமலிருப்பார்களா! இல்லை அவர்கள் பட்டம் பெற்றவர்கள். பதவியிலிருப்பவர்கள் இவ்விதபந்தத்தினுற்கட்டுப்பட் டிருப்பவர்களுக்கு ஒரு பொருளை உள்ளபடி உற்றுணர்ந்து கொள்ளும் ஆற்றல் இருக்கமாட்டாது. எனவே அவர்களிலே குறையோ குற்றமோ கூறுதல் வேண்டியதில்லை. மேலவை அங்கத்தினர் அசீசு அவர்கள் வாய் வேதாந்தம் பேசித் தமிழ் மொழிக்கு ஆதரவளித்துவிட்டு கூட்டு மாநாட்டுக் காற்றில் எற்றுண்டு மற்றென்று விரித்துரைத்தார் என்பது மனக்கவலையைக் கொடுக்கின்றதெனினும் இப் பெரியார் தமினத்துக்குத் தாம் இழைத்திருக்கும் தீங்கைப் பற்றி ஆறுதலாக இருந்து ஆய்ந்துபார்த்து இயற்றிய பிழை இடம்பெறமுன்னர் திருத்தி வைப்பாரென்று எதிர்பார்க்கின்றோம்.

இலங்கையிலுள்ள பல் வேறினங்களுள் இசுலாமியரும் பழமையும் பெருமையும மதிப்பும் வாய்ந்தவர்கள். ஆதலால் அம்மக்கள் ஆதரவு இந்த முடிவுக்கு ஒருபொழுதும் இருக்கமாட்டாதெனறு நாம் அறுதியிட்டுக் கூறுகின்றோம். மக்கள் ஆட்சி முறையிலே மக்களின உண்மை எண்ணத்தை அறிந்த பின்னரே எவ்வித மாற்றமும் மொழிக் கொள்கையிலோ மதக் கொள்கையிலோ இயற்றுதல்கூடும்.

—

# திருவெம்பாவை விளக்கம்

## மணிவாசகப் பெருமான் கண்டகாட்சி

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மமறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்க
னேதேனு மாகாள் கிடந்தா ளென்னே யென்னே
யீதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

இப்பூவுலகில் வாழும் மனித சாதியினரின் ஆண்டு ஒன்று பன்னிரண்டு மாதங்கள் கொண்டது. இந்த ஒரு வருடமும் தேவர்களுக்கு ஒரு நாளாகும். தை மாசம்தொடக்கம் ஆனி மாதம் வரை தேவர்களுக்குப் பகலாகவும் ஆடி மாசம் தொடக்கம் மார்கழிமாதம் வரை அவர்கட்கு இரவாகவும் கொள்ளப்படும். ஆகவே விடியமுன் ஐந்து நாழிகைக்குட்பட்டகாலம் மார்கழி மாசமாகும். அக்காலம் சைவ சமயத்தாராகிய எங்களுக்குப் பக்தி மார்க்கத்தை வளர்ப்பதற்கும், பிரார்த்தனைக்கும், பூசைக்கும் மிக உகந்ததெனக் கொள்ளப்படுகிறது. அன்றியும் இது மகாசங்கார காலத்தின் பின் நிகழும் படைப்புக் காலத்தையும் குறிக்கும். மார்கழி மாசத்தில் வரும் திருவாதிரைக்கு முன்னின்ற பத்து நாட்களிலும் கோயில்களில் பூசை, திருவிழா நடத்தப்படுகின்றன. திருவாதிரையிலன்று தில்லை நடராசப் பெருமானுக்கு அபிடேக தினம்.

திரு - எம்பாவை என்பது கன்னிப் பருவத்துப் பெண்கள் ஒருவரை யொருவர் துயில் எழுப்பி மார்கழி நீராடும் வரலாற்றையே குறிப்பிடுகின்றது. அப்படியாக நீராடப்புகும் கன்னியர் தாம் பூசித்து வரும் பாவையை (இறைவன் அருட்சக்தி) உள்ளத்தில் நினைத்து அதனை விளித்துத் தம் இயல்புகளைக் கூறி ஏனைய மகளிரைத் துயில் எழச் செய்வதனுல் இப்பகுதி திருஎம்பாவை எனப்பட்டது. இதற்கோர் உண்மைக் கருத்துமிருக்கின்றது.

மாணிக்கவாசக சுவாமிகள் பாண்டிநாட்டை அரசு செய்த அரிமர்த்தன பாண்டியனது இராச்சியத்தில் மந்திரியாயிருந்து பின் திருப்பெருந்துறையில் பரமாசாரியரிடம் உபதேசம் பெற்றுப் பின்னர் மந்திரி பதவியைத் துறந்து தவவேடம் புனைந்து பல தலங்களும் தரிசித்துக்கொண்டு பல மலைகளையும் காடுகளையும் பட்டணங்களையும் கடந்து திருவண்ணாமலையைச் சேர்ந்தார். மலைபோல் உயர்ந்து விளங்கும் திருக்கோபுரத்தையும் அங்குள்ள சோலைகளையும் கண்டு மகிழ்ச்சியடைந்தார். பூர்வ காலத்தில் பிரம விஷ்ணுக்கள் அடி முடி தேடித் திரிந்த காலத்தில் பரஞ்சோதியாய் நின்று காட்சிகொடுத்தருளிய திரு க்ஷேத்திரமல்லவா? நினைக்க முத்திதரும் அண்ணுமலையான் அல்லவா? என்று பலவாருக மனத்தியானம் பண்ணிக கொண்டே திருக்கோயிலுள் நுழைந்தார். அங்கே ஈசுவரன் முன் தோன்றிய

தொடர்ச்சி 5-ம் பக்கம்

ஆசிரியல் ...:

# சிங்கள மகாசபை மறுபடியும் வருமா?

## இருமொழிகளுக்கும் ஆதரவுகொடுத்த S. W. R. D. யின் குட்டிக் கரணம்

இலங்கைத் தேசிய மாநாடு — பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி அடுத்தாற்போலச் சிங்கள மகாசபை என்று கொப்புவிட்டுக் கொப்புப்பாய்ந்த திரு. S W. R. D. பண்டாரநாயக இலங்கை விடுதலைக்கட்சியை நிறுவினமை யாவரும் அறிந்ததொன்றே. சென்ற கிழமை நடந்த இந்தக் கட்சியினர் ஆண்டுக் கூட்டத்தின் நிகழ்ச்சிகளைப் பார்க்கும்பொழுது மறுபடியும் சிங்கள மகாசபைக் கூட்டுக்குள் பாய்ந்துவிட்டார் இந்தப் பரோபகாரி என்று நன்கு புலப்படுகின்றது.

இந்த விடுதலைக் கட்சிகளின் சனநாயகக் கொள்கையையுப தலைவரின் இருமொழி ஆதரவுச் சொற்பொழிவுகளையும் நம்பிவந்த இரு தமிழ் அன்பர்கள் ஆங்கு பதிற்றலைவராகவும் கூட்டுச் செயலாளராகவும் முன்னர் கடமை பார்த்தனர். ஆனல் இக்கட்சியின் செயற்குழுவினர் ஒரு மொழி தான் என்று முடிவுசெய்தது அதினின்றும் விலகினர். இந்தச் செய்தி இதுவரைக்கும் அக்கட்சியால் இரகசியமாக வைக்கப்பெற்றது. அன்றியும் சென்ற ஆண்டுக் கூட்டத்திலும் இவர்கள் முன் இருந்த பதவிகளில் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பெற்றனர். தமிழர்களும் தமிழை ஒதுக்கக் கங்கணங்கட்டி நிற்கின்றார்கள் என்று உலகிற்கறிவிப்பதற்காகப்போலும் இந்த உபாயத்தைக் கையாண்டனர் இக்கட்சியினர். ஆனல் திருவாளர் A. C. நடராசாவும் திரு. S தங்கராசாவும் ஒருகணமும் தரியாது இக்கட்சியின் போலி நடத்தையைக் கண்டித்து அறிக்கைகள் விட்டனர்.

### இவர்கள் விலகினர்கள்

எந்த ஒரு இனத்தைச் சேர்ந்தவரும் தன் சொந்த மொழியை வேண்டாமென்று சொல்லவேமாட்டார். ஆகவே அறிஞரான திருவாளர்கள் நடராசாவும தங்கராசாவும் திரு. பண்டாரநாயகவுக்குப் பக்கபலமாக இருப்பார்களென்று பிரதமர் பதவிக்கு வாய் கேட்கும் இத்தலைவர் எப்படி எண்ணியிருந்தாரோ தெரியவில்லை.

அன்றியும் இந்த விடுதலைக் கட்சியின் இருமொழி ஆதரவைப்பற்றித் திரு. நடராசா நன்கு குறிப்பிட்டிருக்கின்றார். அமாவாசைக் கமாவாசை கொள்கையை மாற்றும் திரு. பண்டாரநாயகவை எந்த இனத்தார் நம்புவார்கள். 1944ம் ஆண்டில் அரசாங்க சபையில் இருமொழி ஆதரவாளராக

தொடர்ச்சி 5—ம் பக்கம்

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

### இருவாரப் பலன்கள், 25—12—55 —— 31—12—55

**மேடராசி அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.**

இந்தவாரம் தனலாபம் நிச்சயம் ஆனல் சொந்தக் கருமங்களுக்கு அதிக எதிர்ப்பு உண்டாவதை நீர் காண்பீர். தேகசுகமும் நல்லாயிராது. மிகவும் ஆலோசித்த பின்பே தீர்மானங்கள் செய்தல் நன்று

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

குடும்பச் சிக்கல்கள் இன்னமும் நீக்கப்படாமல் நிலைக்கும். ஒன்றையும் புதியதாய்த் தொடங்கவேண்டாம். இனத்தவர்கள் உம்முடைய மனச்சமாதானத்தைக் குழப்பக்கூடும். சிறிது காலத்துக்குத் தேகசுகமும் கவனிக்கப்படவேண்டும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3 4 திருவாதிரை, புனர்பூசம 1,2,3**

இந்தவாரம் உம்முடையஇடைஞ்சல்களுட் பலவற்றை நீர் நீக்கக் கூடியதாயிருக்கும். பணநிலைமை திருந்த வேண்டும் உம்முடைய கடன்களுட் சில நீக்கப்படும். சமூக சித்தியும நிச்சயம்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

ஒருதளப்பமான வாரம், விசேட கருமங்களில் தீர்மானஞ்செய்வதில் நீர் வருத்தப்படக்கூடும், வயிற்றுக [illegible]

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

இந்த வாரம் இரகசியப்பகைவரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். உம்முடைய செயல்கள் உம்முடைய நெருங்கிய நண்பராலும் பிழையாக விளங்கப்படும் நண்பருக்கு உதவி செய்வதற்கு எல்லை கடந்துபோகவேண்டாம் தேகசுகம் விசேடகவனம் கொடுபடவேண்டும்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

ஒரு நல்லவாரம். வாரஇறுதிக்கு முன் உம்முடைய துன்பங்களுட் சில நீங்கக்கூடும். ஆனல் ஞாயிறும் திங்கள் காலையும் உம்மைச் சிறிது நிலைகுலைக்கும். இனத்தவர்கள் உமக்குச் சிறிது கோபமூட்டக்கூடும்.

**துலாம்சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம 1,2,3ம் பாதம்**

இந்தவாரம் சண்டைகளும் நண்பருடன் பிழை எண்ணங்களும் உண்டாகக்கூடும். பணநிலைமைகள் திருந்தும். ஆனல் வேலை கூடுதலாயிருக்கும் திங்கள் பிற்பகலும் செவ்வாயும் புதன் காலையும் கவனமாய்க்கழிக்கவும்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம அநுஷம், கேட்டை.**

முதல் அரைவாரம் புது முயற்சிகளுக் குரிய நல்லதாயிருக்கும் [illegible] இடைஞ்சல்களின் பின் நீர் சித்தியடைவீர். ஆனல் பின் அரைவாரம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. புதன் பிற்பகல் வியாழன் வெள்ளி காலை கவனமாய்க் கழிக்க வேண்டும்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்**

நல்ல கருமங்களிலே யெனினும் செலவு அதிகரிக்கும் தேக சுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. கண்ணோய்க் கிடமுண்டு. வார இறுதியில் சில நம்பிக்கைத் துரோகத்தைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். மற்றவர்களை விரைந்து நம்ப வேண்டாம்.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

நீர் நல்லபேர் கேளாவிட்டாலும் ஒரு நல்ல வாரம். சில நல்ல வேலைகள் செய்தமையில் நீர் திருப்திப்படுவீர். தனலாபமும் நிசசயம்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம. சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

இந்த வாரம் சில அன்னியர், கல்வி அறிஞர் ஆகியோரின் நட்பைப் பெறுவீர் மனச்சமாதானமும் நிச்சயம் செலவு இந்த வாரம் கூடுதலாகவிருக்கும். ஆனல் அதைப் பற்றி நீர் துன்பப்படமாட்டீர்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

உம்முடைய கருமங்களில் இடைஞ்சலகள் தொடர்ந்து இருந்தபடியே இருக்கும். ஆனல் இந்த வாரம் தொடக்கம் நண்பர் சிறிது உதவியாயிருப்பர் ஒன்றையும் புதியதாகத் தொடங்கவும் வேண்டாம் மாற்றங்களைச் செய்யவும் வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயமும் ஆலய வழிபாடும்

## நிலைமையைத் திருத்துவது அறிஞர் கடன்

சைவ ஆலயங்கள் பல, இடத்திற்கிடம் கட்டப்பட்டிருக்கின்றன. கட்டப்பட்டிருந்தும மக்கள் அவற்றை முறைபாகப் பாவித்து உய்தியடைகின்றனரா? இல்லை ஒருபோதும இல்லை. "ஆலயம்" என்பதன் அர்த்தமென்ன வென்பதையும் ஆலயங்களை ஏன் ஆன்றோர் எழுப்பினர்கள் என்பதையும மக்கள் உணர்வார்களானல் சைவ ஆலயங்கள் சீர்பெற்றுச் சிறப்புடன் திகழும. ஒருபோதும கீழ்நிலையடையாது. எச்சமயத்தவனுபினும்சரி தன் சமயத்தின் உண்மை நிலையை உணராதவிடத்து ஒருபோதும் விமோசனமடைய முடியாது.

ஆலயதரிசனத்திற்குச் செல்வோர் ஆலய தரிசன விதிமுறைகள் தெரியாதவர்களாகக்காணப்படுகின்றனர். ஆலய தரிசனைக்குச் செல்லும்பொ

.... .... .... .... .... .... .... .... ....

செல்வி ந. மாலோகமணி
காவெட்டி கிழக்கு

.... .... .... .... .... .... .... .... ....

முது உடுக்கவேண்டிய உடைகளும், இருக்கவேண்டிய தூய்மையும், வணங்க வேண்டிய முறைகளும் பிரசங்கவாயிலாக அறிவுறுத்தப்படுதல் வேண்டும. இத்துறைகளில் வேண்டியவை செய்தல் சைவ அறிஞர் கடமை.

சைவ ஆலயங்கள் தாங்கிநிற்கும் தத்துவப் பொருளை இன்றைய சைவர்களென்றிருப்போர் உணர்வார்களானல் சைவ ஆலயங்களில் சீர்கேடான சைவக்கொள்கைகட்கே முற்றும் முரணுன செய்கைகள நடைமுறையிலிருக்கமுடியாது.

இன்றுள்ள சில கோயில்களின் முகாமைக்காரர்களை அவதானிக்கின் சைவசமயமென்றால என்ன என்பதே அவர்கட்குத் தெரியாத. ஆலயம் ஏன் உண்டாக்கப்பட்டது. ஆலயம விளக்கும் உண்மை என்ன என்பது அவர்கள் உணர இயலாத நிலையிலிருக்கின்றனர். இனி, ஆலயத்தை நடாத்தும முறைகளென்ன? ஆலயம் சீர்பெறுதற்கு என்னென்ன சிரிய முறைகளைக் கையாள வேண்டும் எனபன சிறிதேனும் அவர்கட்குத் தெரியாது.

"மறப்பினும் ஒத்துக்கொள லாகும பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்"

என்பது வள்ளுவரின் உயரிய வாய்மொழி. இம மொழியை இன்றைய சில ஆலய அர்ச்சகர் சிந்திப்பார்களாயின் ஆலய சன்னிதானங்களில சீர்கேடான இழிவான நடைமுறைகளைக் கையாளார்கள். வேதாந்த சித்தாந்தங்களைத் தெளிவுறக் கற்றோரும், அர்ச்சக முறைகளை தெரிந்தோரும உயர்ந்த ஒழுக்கம்பூண்டோரும ஆலய அர்ச்சகா தொழிலிற்கு உரிமை யுடையவராவர். இப் பண்புகளற்றோர் அர்ச்சகத் தொழிலிற்கு அருகதையுடையோரல்லர் இவை இவ்வாறுக கோயில்களுக்கு வழிபாடுசெய்யப்போவோர் நிலைமைதான் நல்லதாயிருக்கின்றதா? இல்லை. தாசியர் நடனம பிற வேடிக்கைகள் என்றவுடனே திரள் திரளாகத் திருவிழாக காணச் செல்வார்கள. ஆனல் பிரசங்கம் என்று சொன்னால மனங்கசிந்து பின்வாங்கிவிடுவர். இதன் காரணமென்ன? இன்றைய மக்கள் போலியறிவும, போலிவேடமும் போலி நாகரிகமும் இடாம்பீக வாழ்க்கையுமுடையராயிருப்பதே காரணமாகும். வேடிக்கைகட்காக எவ்வளவு பணத்தை அள்ளிக கொடுக்கின்றனர் தகுதியான ஒன்றைச் செய்து இன்பம் பெறுகிறார்களில்லை.

# வசனநடை கைவந்த வள்ளலார்

——————o——————

## நாவலர் நினைத்தகாரியங்கள் நிறைவேறும் சிறப்பு

நாவலரின் ஆற்றலைக் கண்ட பீட்டர் பாதிரியார் இவரைத் தமது கலாசாலையில் ஆசிரியராக அமர்த்தியதுமல்லாது கிறிஸ்தவ விவிலிய நூலைத் தமிழில் மொழிபெயர்க்க இவரே தகுந்தவரென்று வேண்டினர். வேண்டுவார் வேண்டுவன ஈவானது அடியவராகிய நாவலர் மறுப்பாரா? இல்லை முழு விவிலிய நூலையும் மொழிபெயர்த்துக் கொடுத்தார். இன்றும் தமிழுலகம் சிறந்த மொழிபெயர்ப்பென்று கொண்டாடுமாறு செய்தவர் நாவலரல்லவா? விவிலிய நூலைத் தருவித்தருவி ஆராய்ந்து மொழிபெயர்த்

திரு வெ. சு. நடராசா
கொழும்பு

தனிலேயே, இவர் அக்காலத்து இந்நாட்டுக்கிறிஸ்தவர்கள்கூடக் கண்டும் கேட்டுமிராத முறையில் விவிலியநூலை (பைபிளை) நன்கு அறிந்து கொண்டனர். எனவே இவருக்கு கிறிஸ்து மதத்தையும் இந்து மதத்தையும் ஒத்து நோக்கும் வாய்ப்பும் கிடைத்தது. அவர் அக்காலத்தில் இந்து மதத்தை எதிர்த்த தூஷணைகளுக்கும் கண்டனங்களுக்கும் சுடச்சுட மறுப்பும் எதிர்ப்பும் கொடுத்துச் சைவமத உண்மைகளை நிலைநிறுத்தினர். பாதிரிமார்களின் படையெடுப்பு அதிகரிக்கவே இவர் தமது ஆசிரிய வேலையை விட்டு விலகினர். ஏன்? மதத்தொண்டு மக்களுக்கு அவசியமென்று கண்டதனல். பாதிரிமார்கள் மதமாற்றத்திற்கு என்ன என்ன தந்திரங்களை யெல்லாம் கையாண்டனரோ, அவற்றை யெல்லாம் கிரகித்துக்கொண்டார். பாடசாலைகள் நிறுவுவது, பத்திரிகைகள் நடத்துவது, இனிய தமிழ் நூல்கள் வெளியிடுவது, பிரசங்கம் செய்வது ஆகியவைகளையும் இன்னும் பல பணிகளையும் தாமே மேற்கொண்டார். தாமே அரும்பாடுபட்டு நைட்டிகப் பிரமச்சாரிய விரதம்பூண்டு, பெரும் பணி செய்தார். இவர் காலத்தில் ஏனைய மதங்களுக்காக இலங்கையில் எத்தனையோ அச்சுக்கூடங்கள், பத்திரிகைகள் இருந்தும் இந்துக்களுக்கெனஒரு அச்சகம் இல்லையே, பத்திரிகையில்லையே என வருந்தினர். ஆண்டவனிடம் முறையிட்டார்; உழைத்தார். வேண்டியவாறேபண உதவி பலபிற பொருளுதவி கிடைத்தன. அச்சுக்கூடம் அமைத்தார். நூல்கள் பல வெளியிட்டார். சிலவற்றிற்கு உரையெழுதினர். செய்யுள் நடையிலிருந்தவைகளை வசனநடையில் எழுதிப் படிப்பித்தார் இன்றும் நாவலர் வசனநடைக்குத் தனி மதிப்பு இருந்து வருவது பகிரங்க உண்மையே. இதனுற்போலும் "வசனநடை கைவந்த வள்ளலார்" என்று வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள் போன்றோரால் போற்றப்பட்டார். நம் நாட்டவர் இக்காலம்போல் அக்காலத்தில்பத்திரிகைகள் நடத்துவது அபூர்வமாயிருந்தமையால் இவர்தன்னல் இயன்றளவு துண்டுப் பிரசுரங்கள் முதலியன வெளியிட்டுத் தமது உள்ளக்கிடக்கையை எடுத்தியம்பினர். இக்கொள்கையைப் பின்பற்றிப்போலும் பின்வந்த பல சைவப் பெரியார்களால் இந்துசாதனம், சிவதொண்டன், ஆத்மஜோதி முதலிய பத்திரிகைகள் இந்துக்களுக்கெனத் தோற்றுவிக்கப்பட்டு சிறப்புற நடந்து வருகின்றன. அக்காலம் கிறீஸ்தவ பாடசாலைக்குத்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# கட்சி நீக்கித் தலைவர்கள் ஒன்றுக

——————————

## செந்தமிழோசை தேசமெலாம் பரவச் செய்க

வடக்கே திருவேங்கடத்தையும் தெற்கே கன்னியாகுமரியையும் எல்லையாகக் கொண்டு விளங்கிய மொழி தமிழ். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக அழிவில்லாது மேன் மேலும் ஓங்கி வளர்ந்து வரும் மொழிதமிழ். உலகில் வழங்கும் செம்மொழிகளுள் ஒன்றாகவிளங்கும்மொழி தமிழ் அத்தகைய சிறந்த தமிழ் மொழி இன்று ஈழநாட்டிலே பெரும்பான்மையினரால் ஒதுக்கப்படுமாயிருந்தால் அது யாவருக்கும் வருத்தத்தைத் தருஞ் செயலாகும். பெரும்பான்மையினருக்குத் தங்கள் தாய்ப்பாஷை எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் தமிழர்களுக்குத் தங்கள் தாய்ப்பாஷையாகிய தமிழ். கூடிய அவசியமுண்டென்று சொல்லவுமியாயமுண்டு.

ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் அந்த நாட்டில் உரிமையுண்டு இதுவே சுதந்திரத்தின் மேலான பண்பு. நம்நாடு சுதந்திரம பெறவேண்டுமெனச் சேர். பொன். இராமநாதன் முதலிய தமிழ்த் தலைவர்கள் அரும்பாடுபட்டார்கள். அதன் பயனுகவே இன்று நாம் சுதந்தரம் பெற்றுள்ளோம். இவற்றையெல்லாம் பெரும்பான்மையினர் உணர வேண்டும். அங்ஙனம் உணர்வார்களேயானல் சிறுபான்மையினரை நசுக்கவோ அல்லது அவர்களது உயிர் [illegible] பாஷையை [illegible] முன்வரமாட்டார்கள்.

ஈழநாட்டில் பண்டைக் காலங்கொட்டுத் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்துள்ளார்கள். எத்தனையோ தமிழரசர்கள் ஆட்சிபுரிந்துள்ளார்கள். அக்காலங்களில் எல்லாம் பெரும்பான்மையினராகிய சிங்கள மக்கள் வசிக்கவில்லையா? அல்லது தமிழருடன் சேர்ந்து அரசாட்சி நடத்தவில்லையா? அதேபோன்று இன்றும்

ஸ்ரீ சி. கணேசலிங்கஐயர்
தெல்லிநகர்

தமிழருடன் ஒத்துழைத்துத் தமிழ் மொழியையும் அரசமொழியாக்கக்கூடாதா? இவற்றையெல்லாம் விடுத்து வீண்வகுப்பு வாதத்தைக் கிளப்புவது நாட்டிற்கே கேட்டைவிளைவிப்பதாகும். இதுபெரும்பான்மையினர் மேற்கொள்ளும் சமய தர்மத்துக்கும் விரோதமாகும். நாட்டில அமைதியை நிலை நாட்டுவதே சனநாயக அரசாங்கத்தின் முதற் கடமையாகும்.

சங்க காலத்திலே தமிழன்னை சிறந்த கவவளமுடையளாய்ச் சீரும் சிறப்பும் பெற்று விளங்கினுள். பின் ஆங்கிலேயராட்சி வந்ததும் தமிழன்னை சிறிது தளர்வுற்றனளெனினும தனது தொன்மை குன்றாது விளங்கினுள். ஆனல இன்று தமிழன்னைக்கு வரபபோகும் ஆபத்து மிகவும் பொல்லாதது. பெரும்பான்மையினர் தமிழ் பே[illegible] [illegible] மொழியையும் முற்றாக அழித்துவிட முறபட்டுள்ளார்கள். இத்தருணத்தில் தமிழினம் ஒன்றுசேர வேண்டும். தமிழ்த் தலைவர்கள்கட்சிவேற்றுமையின்றி ஒன்றுசேரவேண்டும். அங்ஙனம் ஒன்று சேர்ந்து பெரும்பான்மையினருடன் இப் பிணக்கைச் சமாதான முறையாகத் தீர்க்கவேண்டும். தமிழர்களாகிய நாம் நமது தாய் மொழியைப் புறக்கணிக்கவிட மாட்டோம். நமது மொழிக்கும சமஉரிமை கொடுக்கவேண்டும் என்பதை விளக்க வேண்டும்.

தமிழ்மொழியின் சிறப்புப்பற்றி நூல்கள் தோறும் பரக்கக் காணலாம் தமிழை ஒரு குழந்தையாக உருவகஞ்செய்து வளர்த்தார்கள் ஆன்றோர்கள் தமிழின் வளர்ச்சி முறையைப் பின்வரும் பாடல நன்கு விளக்குகின்றது, அதனைச் சற்று நோக்குவாம.

"பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வையை
யேடிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளருகின்றாள்"
(வி. பா. சிறப்புப்)

எனவே இத்தகைய சிறந்த தமிழ் மொழியைப் பாதுகாக்க வேண்டியது தமிழரது கடனாகும். தமிழறிஞர்களே! தமிழ்த்தலைவர்களே! தமிழபிமானிகளே! யாவரும் எழுமின் விழிமின் தமிழன்னையின் நிலைமையைத் திருத்த ஒற்றுமையாய் உழைமின! தேமுற்ற செந்தமிழோசை தேசமெலலாம முழங்கச் செய்மின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசன நடை கைவந்த வள்ளலார்

3-ம் பக்கத் தொடர்ச்சி

திருநீறு அணிந்து சென்றால் குற்றமாம். இதனைக் கண்டு சகியாத நம்பெரியார் தாமே பாடசாலைகள் தோன்றுவிக்க முயன்றார். வண்ணார்பண்ணை, கோப்பாய், புலோலி முதலிய விடங்களில் தோற்றுவித்து நடத்தினர். இன்றும் நாவலர் தோற்றுவித்த பாடசாலைகள் யாழ்ப்பாணத்திலேயும் சிதம்பரத்திலேயும் நடந்துகொண்டு வருகின்றன. அதுமட்டுமல்ல நாவலர் நாடெங்கிலுமுள்ள சைவப் பிள்ளைகள் சைவப் பாடசாலைகளிலேயே படிக்கவேண்டும் என்று விரும்பினர். இவரது விருப்பம் போல் இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி, கொழும்பு முதலாம் பட்டினங்களிலும் இந்துக்கல்லூரிகள் தோன்றியிருக்கின்றன. சைவப் பாடசாலைகளுக்கென்றே யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, சைவ வித்தியா விருத்திச் சங்கம், கொழும்பு விவேகானந்த சபை போன்ற சபைகள் கங்கணங்கட்டி உழைத்து வருகின்றன.

மாணவர்கள் நல்ல வசன நடை எழுதப் பழகவேண்டுமென்றுபோலும் நாவலர் தாமே இனிய பாலபாடங்களை எழுதி முன்மாதிரி காட்டியிருக்கின்றார்.

ஆலயங்களிலெல்லாம் தாசிகள் நடனமும், மிருக பலியும், வாண வேடிக்கையும் மிகுந்து நிலவிய காலம் இவர் வாழ்ந்த காலம். இந்த வீண் வேடிக்கைகள் எல்லாம் வெறும் ஆடம்பரமேயன்றிப் பயன் தராவென்று போதனை செய்தார். அக்கால மக்கள் இவரது கூற்றுக்கு அவ்வளவு அக்கறை காட்டவில்லை. ஆனால், காலகதியில் என்ன நடக்கிறது என்பது நமக்கெல்லாம் தெரியும். யாழ்ப்பாணத்தில் அநேக கோவில்களில் தாசிகள் நடனம் நிறுத்தப்பட்டு வருகின்றன. மிருக பலியும் வாண வேடிக்கையும் அப்படியே.

கோவில் திருப்பணிகளிலும் ஈடுபட்டார். அன்னிய அரசின் காரணமாக கிலமுற்றுக் கிடந்த நம் கோவில்கள் எல்லாம் திரும்பவும் புனருத்தாரணம் பெற்றுப் பொலிந்து விளங்கவேண்டுமென்று விரும்பினர். ஆங்கிலேயருக்கு முன், நமது நாட்டை அரசாண்ட போத்துக்கேயரும், இடச்சுக்காரரும், நம் கோயில்களையெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கி தங்கள் கோயில்களை (சேர்ச்சுகள்) கட்டினார்கள். இந்துக் கோவில்களை இடித்து அக்கற்களைக் கொண்டு கட்டியெழுப்பிய கிறீஸ்தவ தேவாலயங்கள் நம்நாட்டில் எத்தனை? இவைகளையெல்லாம் அறிந்த நாவலர் வருந்தினர்; உழைத்தார். திருக்கேதீஸ்வரத் திருப்பணி நிறைவேறவேண்டுமென்று பகிரங்கமாகவே கூறி வந்தார். இன்று இராமேஸ்வரத்தில் இருப்பது போன்ற மாபெருங் கோவில்கள் திருக்கேதீஸ்வரத்திலும், திருக்கோணேசுவரத்திலும் இருந்தனவாம். சரித்திரம் சான்று பகருகின்றது. இன்று இக்கோவில்கள் இருந்த இடம் எங்கே? இடித்துக் கிறீஸ்தவ தேவாலயங்கள் கட்டப்பட்டனவா? அல்லது கடலில் தள்ளப்பட்டனவா? நாம் அறியோம். ஆனால் இக்கோவில்கள் போத்துக்கேயர் செருக்கிற்கு இரையாயின என்பது மட்டும் உண்மை. இக்கோவில்களில் முதலில் திருக்கேதீஸ்வரம் முற்காலம் போல் கட்டப்பெறவேண்டுமென்று எண்ணினர். உழைத்தார், தம்காலத்தில். நாவலர் விருப்பத்திற்கிணையப் பிற்காலத்தில் கட்டப்பெற்ற கோவிலே இன்று திருக்கேதீஸ்வரத்தில் திகழ்வது தீர்க்கதரிசனமாக நாவலர் விரும்பியது. இன்னுஞ் சிலகாலத்தில் நிறைவேறுமென்பதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றனவல்லவா? அமைச்சர் கௌரவ சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களைத் தலைவராகக்கொண்டு திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபை கடமையாற்றிவருவது யாவருமறிந்ததே. [வளரும்]

முன்னிதழ்த் தொடர்ச்சி

மகா கவி காளிதாசரின்

# குமார சம்பவம்

தமிழாக்கம்

பரமேஸ்வரக்குழுகம் — ச இராமச்சந்திரன்

மந்திர வல்லமை யாலுறு மைந்து மடங்கி யொடுங்கி-வே
பந்தன முற்றிடு பன்னக மென்று பகர்ந்திடு மாறணரும்
சிந்தை தளர்ந்துக வேமெலியும்பிர சேதச ஞர்படையும்
முந்தைய சக்தி யிழந்திடு மாறது முற்று முரைத்திடுவீர். 81

கைக்கதை யற்ற குபேரனி னெல்கு காத்தினை யற்றறிகின்
வைக்கடு நீளொரு கோடரி கொண்டு மழுக்கு யரம்புரைய
மெய்க்கதை யொன்றது கூறிடு மஃது விரும்பி யுணர்ந்திடினுட்
தைக்குறு மாறொரு சல்லிய முண்டது சாற்றி விளக்கிடுவீர், 82

மண்டிய பொற்பு மழுங்க வயக்கிய வாளொளி யற்றிடுமோர்
தண்டத னிற்புவி கீறிடு கின்ற சமன்னிலை தானறிகின்
கொண்ட நெருப்ப தவிந்திட வைகுறு கொள்ளி எனைத்துணையும்
அண்டிய தன்வலி யற்றிடு மாற தளர்ந்த நிறைந்திடுவீர். 83

சித்திர முற்றிடு செங்கதி ரொத்தணி செம்மை வியங்கிடவே
எத்துணை நோமு மேதரி சிப்பினு மெட்டுணை வெம்மையுமற்
றித்தனை செஞ்சுடர் தாமு மிலவொளி யிறநெழி லற்றிடவே
வித்தக ராரொடு தீததி வந்து விளைந்தமை கூறிடுவீர். 84

பாவுறு தண்புனல் பாய்த நலக்கொரு பங்கமெ னத்தடைமுன்
எவுறு போதி னெதிர்த்திசை யேகி யிடர்ப்படு நீரதனில்
மேவுறு சீர்மை வேகம தற்றி— வீசிடு மாருதமும்
ஓவுறு கின்றமை யென்னத னேதுவை யோதல் புரிந்திடுவீர் 85

### தேசவியோகம்

—0—

**ஸ்ரீமத். அ. க. செல்லையாக் குருக்கள்**

வேதாரணியம் அடங்கன் முறை ஸ்ரீமத் அ. க. செல்லையாக் குருக்கள் அவர்கள் 10-12-55 சனிக்கிழமை தமது சொந்த ஊராகிய வேதாரணியத்தில் தமது 85வது வயதில் சிவபதமடைந்தனர். இவர் பரம்பரையாக நமது ஈழநாட்டில் சைவக் குருக்கள்மாருடைய கடமையை யாற்றிய குருக்கள் வம்சத்தைச் சேர்ந்தவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களால் மதிக்கப்பட்ட அடங்கன்முறை ஸ்ரீமத் அ. கணபதிக் குருக்கள் இவருடைய தந்தையாராவர். தென இந்தியாவிலும் ஈழநாட்டிலும் தேவார திருவாசகம் முதலிய திருமுறைகளை ஓதிவந்தவரும் பல மாணவருக்கு ஆசிரியருமாகவிருந்து பிரசித்திபெற்றவருமாகிய ஸ்ரீமத் அ. க. அருணாசல தேசிகர் இவருடைய இளையசகோதரராவர்.

இவர் ஈழநாட்டிலே 52 வருட காலமாக சைவக்குருக்களாகக் கடமையாற்றியவர். இவர் தேவார திருவாசகங்களை முறையாகப் பக்தியுடன் ஓதும் ஆற்றல் படைத்தவர். தேவாரத் திருமுறைகளை நன்கு ஆராய்ந்தவர். சைவப்பிரசங்கங்கள் செய்யும்பொழுது பன்னிரு திருமுறைகளிலும், சைவப் புராணங்களிலும், சைவசித்தாந்த சாத்திரங்களிலும் முட்டின்றி நூல்களைப் பாராமலே மேற்கோள்களைக் கூறி அவற்றின் நுண்பொருளை விளக்குவார். பலர் இவரிடத்தில் சமய விசேட நிருவாண தீட்சைகளைப் பெற்றுச் சிறந்து சைவ வாழ்க்கை நடத்திவருகின்றனர். பொருட்பற்றின்றித் தமது கடமையை நடத்திவந்தனர். கடவுள்பக்தி நல்லொழுக்கம், வாய்மை, இன்சொல் ஈகை முதலிய நற்குணங்கள் வாய்ந்தவர்.

இவருடைய பிரிவினால் சைவ உலகம் ஒரு மதித்தற்கரிய மணியை இழந்துவிட்டது. இவருடைய ஆன்மா தில்லை நடராசப்பெருமானின் குஞ்சிதபாதத்தின் கீழ் பேரின்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்க அவர் அநுக்கிரகம் புரிவாராக.

### நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

# நம்பிக்கெட்டோம்

"கானலை நீரென்றெண்ணிக் கடுவழிதிரியும் மான் போல் நானுனை அரசென்றெண்ணி நாள் அவம் போக்கினேனே" என்றபடி, யாழ்ப்பாணக் கமக்காரர்கள் (ஐ. தே. கட்சி) அரசாங்கத்தை நம்பி மோசம் போனோம்; நம்பிக் கெட்டோம். சென்ற கார்த்திகை மாசம் 30-ந் திகதி ஏற்பட்ட புயலின் காரணமாயும், மழையின் காரணமாயும், உணவுப் பொருள்களும் மற்றும் பொருள்களும் அழிந்த விதம்போல, யாழ்ப்பாணக்குடாநாட்டில் இதற்குமுன் அழியவில்லை. கமக்காரர்கள் உண்டாக்கிய வாழைகள், வெற்றிலைக் கொடிகள், தக்காளிகள், வெங்காயம், கத்தரி, மிளகாய், கறிமுருங்கை, பலா, மா, தென்னை ஆகிய பொருள்களின் சேதம் கணக்கிலடங்காது. எத்தனையோ இலட்சம் பெறுமதியானது. வடமாகாண அதிபர் ஸ்ரீ ஸ்ரீகாந்தா நேரிலே பொருளை இழந்த கமக்காரர்களுக்கு ஆறுதல் சொல்லி, கவலைப்படாது உற்சாகமாயிருங்கள், அரசாங்கம் நஷ்ட ஈடு தரும் என்று, கண்ணீரும் கம்பலையுமாய் நின்ற கமக்காரருக்குத் தேற்றம் சொன்னர். இப்போது பத்திரிகைகளிற் பார்த்தால் "யாழ்ப்பாணக் கமக்காரர்கட்கு நஷ்ட ஈடு இல்லை" என்று முடிந்தது. இதைவிடக் கொடுமை வேறொன்றுண்டோ. தமிழ் நாடும், தமிழ் மக்களும் என்றுதான் இந்த முடிவோ, அல்லது ஏதும் முடிவிற்கோ. சிங்கள நாட்டில் இப்படிச் சேதமேற்பட்டால், இதுவரை சும்மா விருப்பார்களோ மந்திரிமாரும், பிரதமரும், தலைமைத் தேசாதிபதியும் புத்த ஜயந்திக்குப் பொதுநிதியில் எத்தனை இலட்சம் எடுத்திருக்கிறார்கள். மனிதன் சீவனத்திற்காகப் பாடுபட்டு, கீழ்ப்பூமியில தண்ணீரை மேல் பூமிக்குக் கொண்டுவந்து, நெற்றியில் வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டுச் செய்த பொருள்கள் அழிய அரசாங்கம் நஷ்ட நிவாரணம் செய்யாமலும், நஷ்டஈடு கொடாமலும் விடலாமா? இது என்ன சனநாயக முறை? அயலிலே உள்ள தென்னிந்தியாவிலும், வட இந்தியாவிலும், காற்றினலும், ஆற்றினலும், மழையாலும் ஏற்பட்ட கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் இந்திய அரசாங்கம் செய்யும் உடன் உதவியும் எடுக்கும் விடா முயற்சியும், கொடுக்கும் உணவும், பணமும், கொஞ்சமல்ல. சென்னைப் பிரதமர் காமராசர், நேரில் இடங்களெல்லாம் சென்று பார்த்து, இலங்கையை அரிசி கடனுகத் தரும்படியும் கேட்டார். இது அல்லவா அரசாங்கத்தின் கடமை. இலங்கையின் வட பகுதியாயுள்ள தமிழ் நாட்டில் ஏற்பட்ட, இந்த அக்கமான சம்பவத்திற்கு வேண்டிய ஆக்கவேலை செய்யாத, தமிழ் அமைச்சர்களும், தமிழ்ப் பிரதிநிதிகளும் வாளாவிருக்கின்றார்களா? சனநாயக ஆட்சியில் நாம் ஒரு பகுதியினரல்லவா? எதற்காக அரசாங்கம் இப்படி நஷ்டஈடு இல்லை என்று சொல்வது? இதைத் தமிழ்ப் பிரதிநிதிகளும் அமைச்சர்களும் முடிவு செய்து, அரசாங்கம் நட்டப்பட்ட கமக்காரர்கட்கு, நட்டஈடு கொடுக்கும்படி செய்ய வேண்டும். இல்லையேல் தங்கள் பதவிகளை விட்டு விலகவேண்டும். சனநாயகம் சனநாயக ஆட்சி என்று சொல்லிக்கொண்டு, சர்வ அதிகார ஆட்சியாய் நடத்தும் அரசாங்கத்தில், தமிழ்ப் பிரதிநிதிகளும், தமிழ் மந்திரிமாரும பொம்மைகளாயிருந்து என்ன நன்மையோ? இனிமேல் தமிழ் மக்கள் தங்கள் தலைவிதியைத் தாங்களே சுயநிர்ணயஞ் செய்து, முடிவு கட்டவேண்டும்.

நா. சேனாதிராசா

யாழ்ப்பாணம்கமக்காரர்சங்கத்தலைவர்

சுழிபுரம்

10-12-55.

### காரைநகரில் நாவலர் குருபூசை

காரைநகர்ச் சைவமகா சபை மண்டபத்தில் 5—12—55-ல் நாவலர் குருபூசை நடைபெற்றது. திரு. இ. நாகலிங்கம் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் வித்துவான் பொன். முத்துக்குமாரு பி. ஓ. எல். அவர்கள் நாவலர் காட்டிய நன்னெறி என்பதுபற்றிப் பேசினர் திருவாளர்கள் ஆ. வே. அருளம்பலம், ஆ. தியாகராசா ஆகியோர் குறிப்புரை கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன வேண்டும் ?

1-ம் பக்கத் தொடர்ச்சி

இந்த இடத்திலே நமது முன்னோர் சிலரைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெரியோரின் சரிதங்களைப் படிப்பதால், அவை நேராகவும் மறைமுகமாகவும் நமது வாழ்க்கை உயர்வதற்கு உதவி புரியும்.

பெரிய புராணத்திலே ஒரு சிறந்த நிகழ்ச்சி, அற்புதக் கனியை ஆண்டவனிடமிருந்து பெற்ற அம்மையாரின் கதை; கடவுளாலேயே, "அம்மையே" என்று அழைக்கப்படும் பாக்கியத்தைப் பெற்ற பெரிய அம்மையார்.

"நம்பால் இங்கு வேண்டுவதென்?" என்கின்றார் இறைவன்.

ஆண்டவனிடம் அம்மையார் கேட்டுப் பெற்றதைப் பின்வரும் பாடல் தெளிவாகக் காட்டுகின்றது.

இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டுகின்றார்
"பிறவாமை வேண்டும்; மீண்டும்
பிறப்புண்டேல், உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும் போதுன்
அடியின் கீழ் இருக்க" என்றார்

அம்மையாரின் உயரிய குறிக்கோள் இது. ஆண்டவனிடத்தே அழியாத பேரன்பை வேண்டுகின்றார். பிறவிப் பிணியிலிருந்து தன்னை மீட்கும்படி இரந்து நிற்கின்றார். அப்படி, பிறப்புண்டாயின், கடவுளை ஒரு கணமும் மறவாமலிருக்கும் மனம் வேண்டும் என்கின்றார். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அநவரதத் திருநடனம் புரியும் ஆண்டவனின் அடிகளின் கீழ் என்றும் இருக்க அருள் புரிய வேண்டும் என்று கேட்கின்றார். பக்திச் செல்வமல்லவா இது!

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்னடி என் மனத்தே
வழுவாதிருக்க வரந்தர வேண்டும்
... ... ... ..."

என்கின்றார் இன்னொரு பெரியார்.

இவை நடந்த கதைகள். இனி நமது சட்டநூலிற்கு—இலக்கண நூலிற்குச் செல்வோம். நல்வாழ்விற்கு வேண்டிய நல்ல நீதிகளை நலமுடன் உரைத்த நம தமிழ்ப்புலவர் திருவள்ளுவரது திருக்குறளைத்தான் இங்கே குறிப்பிடுகிறேன்.

"வேண்டுங்கால் வேண்டும்
பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்"
"பற்றுக பற்றற்றான் பற்றினை
அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்று அறிவுறுத்துகின்றார் திருவள்ளுவர்.

பாடல்களையும், குறள் மணிகளையும் படித்து இரசிக்க முடியுமே தவிர, செயலில் காட்ட எம்மால் முடியுமா? முடியாதா? இது சிந்திக்க வேண்டிய விஷயம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
காரைநகர் மேற்கு
எஸ். முருகேசு வயிரமுத்துப்பிள்ளை
—வழக்காளி.

இல. 11672.

எதிராக

காரைநகர் மேற்கு
அம்பலவாணர் கதிரவேலு
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11672-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக் காணிகள் 1956௵ தைமீ 21௳ சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 14110/17-ம் ரூபா: 12000/=க்கு 21-9-1954தொடக்கம் 3-5-1955 வரை 5½ வீதமான வட்டியும் அதன் மேல முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவும். கோட்டுச் செலவில் ரூபா: 200/ அறவுபண்ணப்பட்டது.

### காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று களபூமியிலுறை "தம்பன்" பா நீ இலா 16 குழி 15 அல்லது பா நெ இலா. 25 குழி 1 ஷை "தம்பன்" பா. நெ இலா. 11 இரண்டும் சேர்ந்து பா. நெ. இலா முப்பத்தாறு(36) குழி மூன்றும்(3 இனறும் எல்லை கிழக்கு காசிநாதர் அம்பலவாணருக்கும் சண்முகம் அருணாசலத்திற்கும் உரிய ஆதனம், வடக்கு சுப்பர் இராமலிங்கத்திற்குரிய வாதனம். மேற்கு இராமநாதர் பெண் இராசம்மாவிற்குரிய வாதனம், தெற்கு சண்முகம் கந்தையாவிற்கும் வேலுப்பிள்ளை கையபெண் சிவகாமிக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலும்.

## நாவலர் விழா

அளவெட்டி சகாநந்த வித்தியாசாலை முத்தமிழ் மாணவ மன்றத்தினரால் ஷை வித்தியாசாலை மண்டபத்தில் சென்ற 20-12-55ல் சிறப்பாக நாவலர் விழா ஆசிரியர் திரு. மு. செல்லையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சைவப்புலவர் திரு. ச. சச்சிதானந்தம் "நாவலரின் சீரிய வழ்க்கை" என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினார்கள்- தமிழ்மொழிக்கும், சைவசமயத்திற்கும் எதிர் நோக்கி வரவிருக்கும் பேராபத்தைக் குறிப்பிட்டு நவலர் பெருமானின் இலட்சியப் பாதையிலே நாம் சென்றால் வெற்றிகாண முடியுமெனக் குறிப்பிட்டார், ஆசிரியர் திரு. இ முருகேசு அவர்கள சேர். பொன் இராமநாதனின் இலட்சிய வாழ்வு" என்னும் விடயம்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். பின்பு வித்தியாசாலை மாணவ மாணவிகளின் நாவலர் நினைவுப் பாடல்களும் நாவலர்பற்றிய பேச்சுகளும் நிகழ்த்தப்பட்டன.

2. ஷை காரைதீவுக் கோவிற்பற்று தங்கோடையிலுறை "தீணைப்பிட்டி" பா நெ. இலா. பதினைந்தரை (15½) எல்லை கிழக்கு சங்கரப்பிள்ளை பெண் பாறுபதிக்குரிய வாதனம், வடக்கு கதிர்காமர் தம்பையாவிற்கும் முருகேசு கைம்பெண் இலட்சுமிக்குரிய வாதனம், மேற்கு கணபதிப்பிள்ளை கந்தையாவிற்கும் சண்முகம் கந்தையாவிற்குமுரியவாதனம், தெறகு வேலுப்பிள்ளை கந்தையாவிற்குரியவாதனம். இதடங்கலும்.

1955-ம் ௵ கார்த்திகைமீ 17௳
வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்.

M. 206 23-12-55. (அ. 400)

கோட்டை அடையாள
இரட்டைப் பீலி
# வீட்டு ஓடுகள்

## திறமான திலும் திறமானது

உறுதிக்கும் நம்பிக்கைக்கும் ஒப்பில்லாதது. பெருமழையில் மிகச் சிறிய அளவு நீரை உறிஞ்சுகின்றது. மழை காலத்தில் தண்ணீர் சிறிதாயினும் ஒழுகமாட்டாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதை உபயோகிக்கும் பெருந் தொகையினரின் அபிப்பிராயத்தைக் கேட்டறிக

நீண்டகால உபயோகத்தில் திறமான பொருளே மலிவானதாகும்.

வில்லியம் மேதர் சன்ஸ்.
சோல் ஏஜன்ஸ், யாழ்ப்பாணம்,

M. 204. 23. 25-12—6, 13-1.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

—:0:—

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் காரைநகர் வடக்கு வலந்தலை வீ வேலுப்பிள்ளை அவர்களின் அடைவு கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி எடுபடாமல் இருக்கும் இதன் கீழ் விவரிக்கப்படும் நகைகள் 1956-ம் ஆ தைமீ 17௳ செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| இல. | திகதி | கொடுத்த ரூபா. | ஊர் | பெயர், | நகை விபரம். |
|---|---|---|---|---|---|
| 1165 | 20-9-54 | 750-00 | காரைநகர் | கந்தையா வரத | 2 சங்கிலியும் பலுகாடு |
| | | | | ராசா, | 2 பெண்டனும் |
| 1488 | 22-11.54 | 500 00 | ,, | , | 1 சோடி காப்ப 1 சங்கிலி கூடு. (தகடில்லை) |

M. 107. 23 30-12.

வை ஏரம்பமூர்த்தி,
Auctioneer.

# திருவெம்பாவை விளக்கம்

2-ம் பக்கத்தொடர்ச்சி

பரமாசாரிய கோலத்தைக் காட்டியருள, மணிவாசகப் பெருமான் அனல் கண்ட மெழுகுபோல் மனமுருகித் தன்னை மறந்து பாடினர்; கண்ணீர் விட்டார்; பரவசமடைந்தார் துதித்தார். இப்படியாக அவர் அண்ணமலையான் அடிக்கமலம் இறைஞ்ச வந்த காலம் மார்கழி மாசம். அங்கே கன்னிப் பருவத்துப் பெண்கள் மார்கழிமாசத் திருவாதிரை நட்சத்திரத்திற்கு முன்னின்ற 10 நாட்களிலும் விடிய ஐந்து நாழிகைக்கு முன் கடவுளை தோத்திரம் செய்ய எழும்பி வீடுவாசல்களைப் பெருக்குவார்கள்; மெழுககிடுவார்கள்; கோலமிடுவார்கள்; பின் நீராடத் தடாகங்களுக்குச் செல்வார்கள் செல்லும்போது தங்கள் தோழிகளை வீட்டு வாசலுக்கு முன்பாகப் போய் அழைத்துக் கொண்டே போவார்கள். சிலர் நித்திரையிலிருப்பார்கள். அப்படி நித்திரையிலிருப்பவர்களையும் தோழிகள் போய், "தோழிகாள்! நமது கடவுளாகிய பரமசிவனை மற்றவர்கள் தோத்திரம்பண்ணக் [illegible] லாமா?" என்று சொல்லி அவர்களையும் தட்டி எழுப்பிக்கொண்டு நீராடச் செல்வது அங்கே வழக்கமாயிருந்தது.

இதனைக் கண்ட எங்கள் மணிவாசகப் பெருமான் அப் பெண்கள் அச்சமயத்தில் சொன்ன பான்மையாக அதாவது அவர்கள் உரையாடுவதுபோல் "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை" என்று இருபது பாட்டுக்களையும் பாடி அருளினார் பின்னர் அங்கு வசிக்கும் பெண்கள் இசைப்பாட்டோடு ஆடும் ஆடல்களைப் பார்த்து அவர்கள் ஆடிப் பாடுவதுபோல் "திருஅம்மானை" என்ற திருவாசகத்தையும் பாடியருளினார். ஆகவே மாணிக்கவாசக சுவாமிகள் விசேஷமாக மார்கழி மாதத்துடன் சம்பந்தப்பட்டிருக்கின்றார் இதனாற்றான சிவாலயங்களிலெல்லாம் மணிவாசகப் பெருமானுக்கு உற்சவம் நடத்துவதும் திருவெம்பாவை ஓதுவதுமாகப் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டு இன்றும் இதைக் கொண்டாடி வருகின்றோம்.

போற்றி யருளுகநின் னாதியாம்
பாதமலர்
போற்றி யருளுக நின் னந்தமாஞ்
செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்ற
மாம பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும்
போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறு
மிணையடிகள்
போற்றிமா லான்முகனுங்
காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்ட
ருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீராடேலோ
ரெம்பாவாய்.

(*மார்கழிமாசத் திருவாதிரைவிளக்கம், காரைநகர் சைவமகாசபையாரின் முதலாம் வெளியீட்டின் சில பகுதிகள்.)

## அரசியல் அலை

2-ம் பக்கத் தொடர்ச்சி

இருந்த இத் தலைவர் 1955 வரைக்கும் அந்தக் கொள்கையை மாற்றாது பிரதமர் பதவிக்கு ஒரு வழிவகுத்துவிட்டது ஒருமொழி உபாயத்தால் என்று நினைத்துத் தனது கொள்கையை இப்பொழுது மாற்றினால் இவரைத் தலைவர் என்று யார்தான் அழைப்பர். சிங்களமகாசபை மறுபடியும் தனது வாக்குவாத விசுவரூபத்தைக் காட்டிவிட்டது. அவர்கள்...?

இந்தச் சந்தர்ப்பத்திலே திருவாளர்கள் நடராசாவும் தங்கராசாவும் விடுதலைக் கட்சியை விட்டு விலகியமை பாராட்டற்குரியது. ஐக்கிய தேசியக் கட்சியின் மொழிக் கொள்கை எது என்பதை அறிந்தும் இன்னமும் அதிலே அங்கத்துவம் வகிக்கும் தமிழ் அன்பர்களைப்பற்றி உலகம் என்ன நினைக்கின்றதென அவர்கள் இன்னமும் அறிய விலைப்போலும்?

## மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் மகோற்சவம்

பன்றித்தலைச்சி கண்ணகை அம்மை என வழங்கும் இராஜராஜேஸ்வரி அம்பாள் மகோற்சவம் பின்வருமாறு நடைபெறும்.

மார்கழி மாதம் 5ந் திகதி செவ்வாய்க்கிழமை (20-12-55) காலை 10 மணிக்குள் துவஜாரோகணம், இரவு யாகாரம்பம் முதலியன. 12-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மிருக யாத்திரை. இரவு சப்பரம், 13-ந் திகதி புதன் காலை 10 மணிக்குள் இரதோற்சவம், 14-ந்திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்குள் தீர்த்தோற்சவம், யாககும்பாபிஷேகம், இரவு டோலோற்சவம், துவஜாரோகணம், சண்டேஸ்வரி விழா, 15-ந்திகதி வெள்ளி காலை பிராயச்சித்தம், இரவு வைரவ பொங்கல் ஆராதனை ஆகியவை உச்சவாசிரியர் ஊரெழு சிவஸ்ரீ ச. பா. வைத்தியநாதக் குருக்கள் அவர்களால் நடாத்தப்படும்.

— நிருபர்

## திருக்கேதீச்சரத்தில் திருமுறை முழக்கம்

நிகழும் மார்கழி 1ந் தேதி (15-12-55) வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் திருக்கேதீஸ்வராலயத்தில் பல அடியார்கள் சூழ்ந்து நடேசர் சந்நிதியில் திருமுறைப்பாக்களை ஓதினர். இதனைச் சைவ இளைஞர் திரு. செ. கோவிந்தசாமி அவர்கள் ஆரம்பித்து நடாத்துகின்றார். இத் திருமுறைப் பாராயணத்தில் ஆடவர் மகளிர் மாணவர் பலர் கலந்து கொள்ளுகின்றனர். —நிருபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவரோடு பனிப்புயல் பேசுங் காட்சி

1-ம் பக்கத்தொடர்ச்சி

கொழுகும் குழந்தையென‌க் காட்சியளிக்கிறது.

திருக்குற்றால மலைப் பகுதியில் சந்தனம், அகில், போன்ற மணங்கமழ் மரங்கள் செறிந்த வனங்கள் நிறைந்துள்ளன. கண்களைக் கவரக்கூடிய மலர்ச் சோலைகள் பல நோக்குமிடமெல்லாம் நிரம்பியுள்ளன. மலர்ச் செடிகளின் மடித்தலங்களில் தவழ்ந்து, பின் பசுமையான கமுகு, வாழை போன்ற மரங்களை அணைந்தவாறு சலசலப்புடன் சென்றுகொண்டிருக்கிறது, அடவியினின்று ஓடிவரும் குளிர்ந்த நீர். எங்கு பார்த்தாலும் தேனைச் சிந்திக்கொண்டிருக்கும் செண்பக மலர் நிறைந்த சோலையொன்றில் தென்றல் பிறக்கிறது. பிறந்த அத் தென்றல் செண்பகப் பூ வரும்புகளாகிய தொட்டிலில் ஆடிக் களிப்புற்றுப் பின் தொன்று தொட்டு விளங்கும் நீர்ப்பரப்பாகிய தேனருவியில் படிந்து, சங்குகள் முழங்குகின்ற திருக்குற்றால நாதர்கோவில் வாயிலில் தவழ்ந்து விளையாடுகிறதாம். இக் கவிதையை அனுபவித்துப் படிக்குந்தோறும் நாமும் கவிராயரது கற்பனை நிறைந்த உள்ளத்துடன் ஒன்றிக் கலந்துவிடுகிறோம். நாம் திருக்குற்றாலநாதர் கோயிலின் தலைவாயிலில் நின்றுகொண்டிருப்பது போன்ற ஒரு உணர்ச்சியை அடைகிறோம். வானத்தினின்று கங்கைதான் இறங்கி வருகிறதோவென்று ஐயும்படி, மலைமுகட்டினின்று 'சோ' வென்ற ஓசையைக் கிளப்பியவாறு விழுந்துகொண்டிருக்கும் அந்த அருவி நம் அகக்கண்களுக்கு முன் நன்கு காட்சியளிக்கிறது. சூரியகிரணங்கள், தரையில் படாதபடி தடுத்துக்கொண்டிருக்கும் கருமையான மேகக்கூட்டங்கள் இங்குமங்கும் அலைந்துகொண்டிருக்கும் காட்சியும் நம் மனத்திற்குத் தோன்றும்போது, அவைகள் திருக்குற்றால நாதருக்காக ஏதோவொரு திருப்பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனவோவென்று சந்தேகிக்கும்படியிருக்கிறது. மென்மையான பனித்துளிகள் இடைவிடாது விழுந்துகொண்டிருப்பதை பார்த்தால் திருக்குற்றாலநாதர் சன்னதியை நோக்கிவரும் பக்தர்களுக்குப் பன்னீர் தெளித்து வரவேற்பளிப்பதுபோன்று தோன்றுகிறது. கோயிலின் தலைவாயில் நன்கு சுத்தஞ் செய்யப்பட்டு வண்ணக்கோலங்கள் பல தீட்டப்பட்டு அழகுடன் பிரகாசித்துக்கொண்டிருப்பது புலப்படுகிறது.

அத் தலைவாயிலில் காலினிற் சிலம்பு கொஞ்ச, கைவளை குலுங்க, கழுத்தில் அணிந்துகொண்டிருக்கும் முத்துமாலை அசைய அங்குமிங்கும் தவழ்ந்தவாறு ஒரு குழந்தை நம்மைப் பார்த்துப் பார்த்துச் சிரித்துக் கொண்டே அருகில் அழைப்பது போலுற நமக்குத் தோன்றுகிறது. "இக் குழந்தை யாருடையதாக இருக்கும்"! என்ற சந்தேகம் நம் உள்ளத்தின் ஒருமூலையினின்று தோன்றி நமக்குப் புலனாகாததொரு கலவரத்தை நம் மனத்தில் எழுப்பிவிடுகிறது. உடனடியாக உள்ளத்தின் மற்றொரு மூலையினின்று அதற்கு விடை கிடைக்கிறது. அபல மனமே! அதற்குள்மறந்துவிட்டாயா? அக் குழந்தைதான் திரிகூடராசப்பக் கவிராயர்விவரிக்கும் இயற்கை யன்னையின இணையிலலாத் "தென்றலங் குழவி" என்கிறது அவ்வகைமனம்.

தாவிச் சென்று அணைத்துக்கொள்ள வேண்டுமென்ற அடக்கமுடியாததொரு ஆசை நம்மைப் பிடித்துக்கொள்கிறது. ஆஹா! அக் குழவியின் இன்பமான அரவணைப்பில் நாம் பெறும் இன்பத்தை விவரிக்க இவ்வெழுதுகோலுக்குத்தான் திறன் ஏது?

"பிரச மாமலர்ச் செண்பகப்
பொதும்பரிற் பிறந்து
திரவு பூஞ்சினைத் தொட்டிலாட்
டயர்ந்து தேனருவிப்
பரம வாரியிற் படிந்து நீள்
பணிலமாக் கோயிற்
குரவன் முன்றில் வாய்த் தவழ்வ
தோர் தென்றலங்குழவி

(—திருக்குற்றலத் தலபுராணம்.
மந்தமாருதச சருக்கம்—௯,)

—வளரும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

அனலைதீவு இப்போது வண்ணார்பண்ணை கிழக்கு கணபதி ஐயர் சுப்பையா ஐயர் — வழக்காளி

இல. 9548

எதிராக

1 அனலைதீவு முருகேசு கந்தையாவும் பெண்
2 ஷை தெய்வானைப்பிள்ளையும்
— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 9548-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணிகளை 1956-ம் ௵ தை ௴ 17 ௳ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 2068-ம் இதில் ரூபா 1250 க்கு 20-1-53 திகதி தொடக்கம 16-11-54 வரைக்கும் வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீதவட்டியையும் அதன்பின் முழுத் தொகைக்கும் 16-11-54 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 322-88 இதில் ரூபா 600 கொடுபட்டது.

காணி விபரம்

1 தீவுப்பகுதி அனலைதீவுக் கோவிற்பற்று அனலைதீவு இறைகொடியன் தோட்டம் நிலப்பரப்பு 8-ம் பயிர்வகைகளும் பனைகள் வடலிகளும் பழைய கிணறும் வீடும் எல்லை கிழக்கு வேலாயுதர் வயித்திலிங்கம் வடக்கு சின்னையா ஐயர் சோமசுந்தர ஐயரும் பிள்ளைகளும் மேற்கு கையொழுங்கை தெற்கு வயித்திலிங்கம் மகள் மனோன்மணி.

2 அனலைதீவுக் கோவிற் பற்று அனலைதீவு இறை பெருங்கணனசீமா நிலப்பரப்பு 10ம் தென்னைகளும் புளியமரங்களும் எல்லை கிழக்கு சண்முகம் வேலுப்பிள்ளையும் மறு வடக்கு வேலுப்பிள்ளை அம்பலவாணி மேற்கு கந்தையாவும் பெண் தெய்வானையும் தெற்கு சிவம் பெண் சேதுப்பிள்ளை.

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்
13-12-55
M 205 23-12 (௹ 50)


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
மனேஜர்.

Std. 14 20-11-46—20-11-49.


திருக்கேதீச்சரத்தில்

# திருவெம்பாவை

திருக்கேதீச்சரமென்பது ஈழவளநாட்டின் முடியென வழங்கும் வடபாலமைந்த சிவஸ்தலம். தேவாரம் பெற்ற இரு தலங்களுள் ஒன்று. சம்பந்தர், சுந்தரர் மாத்திரமல்லாமல் அப்பர் சுவாமிகளும் தேவாரம் பாடியிருக்கிறதாகப் பெரியோர்களால் ஊகிக்கப்படுகின்றது. இதனை 'பூதியணி பொன்னிறத்தர்' என்ற திருத்தாண்டகத்தில் வரும் "கேதீச்சரமேவினர்" என்ற அடியிலிருந்து உணரக்கூடியதாக இருக்கிறது.

மணிவாசகப் பெருமானும் ஈழத்துக்கண்மையிலுள்ள திருப்பெருந்துறை, உத்தரகோசமங்கை, இராமநாதபுரம முதலிய இடங்களில் இருந்து இறைவனை வழிபட்டவர்கள், சைவத் தொண்டு செய்தவர்கள். சிவம் என்றே ஏகோபித்து அழுது அழுது கண்ணீர் சொரிந்தவர்கள்; அந்த அன்புக் கண்ணீர்த் திவலை வட ஈழத்திலும் பட்டது. அதுகாரணமாக யாழ்ப்பாண மக்கள் திருவாசக பாராயணம் மிகுதியாகச் செய்து வருகின்றனர். ஆகவே மணிவாசகரது சைவசித்தாந்தக் குரல் ஓசை கேஸ்வரநாதரது திருச்செவியிலும் விழுந்தது எனலாம்.

இவர்களுக்குப் பின் நாடெய்ய நல்வழிகாட்டிய ஆறுமுகநாவலரது அருள்வீறு கொண்ட ஆப்த வாக்கியங்களும் கேதீஸ்வரப் பெருமானின் திருவடிக் கமலங்களில் சேர்ந்தன. ஆதலால் வழிவழி சைவப்பெரியோர்களால் புகழ்ந்துரைக்கப்பெற்ற தலம் என்று கூறுதல் மிகையாகாது.

இத்தகைய திருக்கேதீச்சரத்தில் மணிவாசகர் அருளிச்செய்த திருப்பள்ளியெழுச்சி திருவெம்பாவை, ஆகியவற்றில் கூறும் இனிய மொழிகளின் உண்மைகளை இத்தலத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. திருப்பணிச் சபையார் காடுவெட்டி நாடுகொண்டு நல்வழிப்படுத்தும் இப் புண்ணியதலத்தில் சைவ மக்கள் விரதம் பூண்டு, நடேசப்பெருமானை வணங்குகின்றனர். அதுவுமல்லாமல் பனி குளிர் இவற்றைப் பாராது, ஆண்டவனைச் சிந்தனையில் வைத்துக்கொண்டு பாலாவியில் தீர்த்தமாடி வைதிக சைவ நெறியினராய் திருச்சந்நிதியில வந்து தோத்திரம செய்கின்றனர். இங்ஙனம் ஆடவரும் மகளிரும் செய்யும காட்சி திருவண்ணாமலைப் பெண்கள் மார்கழித் திருவாதிரைக் காலத்தில் செய்த காட்சியை நிகர்க்கின்றது. இத்தகைய திருவெம்பாக் காட்சியைச் சைவமக்கள் திருக்கேதீச்சரத்தில் கண்டு களித்து நடேசப்பெருமானின் ஆர்த்தரா தரிசனத்தையும் பெற்றுச் சிவானந்தத்தில் மூழ்கி திருவருட்பேற்றையடைவார்களாக.

—செ. கோ.

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. 9154 பிறிவிடுதல்

1. கவிரியல் சின்னப்புவும்
2. பெண் திரேசம்மா

பாஷையூர்
வழக்காளிகள்,

எதிர்

1. மருத்தீசு பிலிப்புப்பிள்ளையும்
2. பெண் ஞானம்மா

பாஷையூர்,
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 9151ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1956௵ மாசி ௴ 11௳ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

காணி விபரம்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைச் சேர்ந்த பாஷையூரில் ஏகாந்தரை என்னுங்காணி கி.இ.குளி 8 22/32 கல்வீடும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

எல்லைகிழக்கு வெவிச்சோர் சலமன்
வடக்கு பறுனாந்து பெண் மரியம்மாவும் பங்காளரும்
மேற்கு கவிரியல் சுவக்கிம பிள்ளை,
தெற்கு றோட்டுக்குப் போகும் ஒழுங்கை

இவை அடங்கிலும்,

வ. அ. துரையப்பா
யாழ்ப்பாணம், கொமிஷனர்.
14-12-55.
M 201, 23 12, ௹ (200)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 11798

சாமுவேல் வயிரமுத்து சின்னம்மா, கோப்பாப்பாய்வடக்கு,
வழக்காளி.

எதிர்

1. நாகமுத்து நடராசா கோப்பாய் தற்போது கோலாலம்பூர் ருமலிங்கம் கிறிஸ்ணபிள்ளை
தத்துவம்.
2. K. சுப்பிறமணியம் கிராமவயித்திபசாலை, கோப்பாய்.

எதிராளி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 11798ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1956 ௵ தை ௴ 28 ௳ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

யாழ்ப்பாணம் கோப்பாய் வடக்கில் கோட்டை வாய்க்கால் என்னும் காணி நி. இ. 3 வீடும் வான்பயிர் செய்பயிர்களும்.

எல்லை கிழக்கு றோட்டு
வடக்கு சின்னத்தம்பி பெண் கனகம்மாவின் ஆதனம்.
மேற்கு ருமலிங்கம் நாகமுத்துவும் பெண் தெய்வானையும்.
தெறகு நன்னிபெண் சின்னியும் சந்தைக்குப் பாவிப்புக்குவிடப்பட்ட முடிக்குரிய நிலம்.

இவை அடங்கிலும்.

வ. அ. துரையப்பா
கொம்மிஷனர்.
யாழ்ப்பாணம், 16-12-55.
M 202 23-12-55. (௹ 100)

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond.) residing at 245, Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Friday Dec, 23, 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org